# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2012/16 - 2017 මාර්තු මස 28 වැනි අඟහරුවාදා - 2017.03.28

*2012/16 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அரிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2017.01.06 ஆந் திகதிய 2000/85 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் எச். எஸ். குறியீட்டு இல. 1006.30.10, 1006.30.20 மற்றும் 1006.30.30 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரிசி இறக்குமதியின் மீது ஒரு கிலோ கிராமிற்கு 15 ரூபாவாக அறவிடப்படும் விஷேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து ஒரு கிலோகிராமிற்கு10 ரூபாவை விலக்களிப்புச் செய்தல் வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கின்றேன்.*

இந்த உத்தரவின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள எச். எஸ். குறியீட்டு இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரிசி இறக்குமதிக்காக ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 5 விசேட வியாபாரப் பண்ட அறவீடாக 2017.03.31 ஆந் திகதி வரை அறவிடப்படுதல் வேண்டும்.

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, மாச்சு மாதம் 28 ஆந் திகதி.*

*04 - 349*


1A PG 003479 - 532 (2017/03)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*